# Padasalai's
## Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

சுராவின்

# தமிழ் உரைநூல்

## 7 ஆம் வகுப்பு

## மூன்றாம் பருவம்

2019–20 ஆம் ஆண்டுக்கான புதிய பாடத்திட்டத்தின்படி, தயாரிக்கப்பட்டுள்ளது.

சிறப்பம்சங்கள்

- பாடப்பகுதிகளிலுள்ள எல்லா பிரிவுகளிலும், விரிவான விளக்கங்களுடன் கூடிய விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மதிப்பீடு, இலக்கணம், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், கூடுதல் வினா விடைகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.
- மூன்று அலகு தேர்வு வினாத்தாள்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
- சுராவின் மாதிரி மூன்றாம் பருவ பொதுத் தொகுத்தறித் தேர்வு வினாத்தாள் விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

**2019-20 புதிய பதிப்பு**

**© வெளியீட்டாளர்கள்**

ISBN : **978-81-8449-579-9**

குறியீட்டு எண் : T3-7-T

எழுதி வழங்கியவர்

**கி. லதா,** M.A., B.Ed., M.Phil.,

**தலைமை அலுவலகம்:**

1620, 'ஜே' பிளாக், 16-ஆவது
பிரதான சாலை, அண்ணா நகர்,
சென்னை-600 040.
☎ 91-44-26161088, 26161099
**e-mail** : enquiry@surabooks.com
**website** : www.surabooks.com

**Our Guides for XI, XII Standard**

- Sura's Tamil
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM )
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Biology (EM/TM)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

Also available Sigaram Thoduvom mini guide (EM/TM) for all Subjects.

# பதிப்பாசிரியர் உரை...

**எங்கள் வாழ்த்திற்குரிய**

**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். புதிய பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட பாடநூல் 2019ன்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின் 7ஆம் வகுப்பு - தமிழ் உரைநூல் - மூன்றாம் பருவ** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

புதிய தேர்வுத்திட்டத்தின்படி, 7ஆம் வகுப்பு தேர்வுகளில் நீங்கள் அதிக மதிப்பெண் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.

நலமே விளைக!

- பதிப்பகத்தார்

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,

(சுரா பதிப்பகம்)

மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு

புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 96001 75757 / 8124301000
வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com
பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

# பொருளடக்கம்


| வ. எண் | பொருண்மை, இயல் | பாடத் தலைப்புகள் | | பக்க எண் |
|---|---|---|---|---|
| | | மனப்பாடச் செய்யுள் | | V-VI |
| 1. | நாகரிகம், தொழில், வணிகம் **நயத்தகு நாகரிகம்** | கவிதைப்பேழை | விருந்தோம்பல் | 1-30 |
| | | | வயலும் வாழ்வும் | |
| | | உரைநடை உலகம் | திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி | |
| | | விரிவானம் | திருநெல்வேலிச் சீமையும் கவிகளும் | |
| | | கற்கண்டு | அணி இலக்கணம் | |
| | | அலகு தேர்வு -1 | | |
| 2. | அறம், தத்துவம், சிந்தனை **ஒப்புரவு ஒழுகு** | கவிதைப்பேழை | புதுமை விளக்கு | 31-60 |
| | | | அறம் என்னும் கதிர் | |
| | | உரைநடை உலகம் | ஒப்புரவு நெறி | |
| | | விரிவானம் | உண்மை ஒளி | |
| | | கற்கண்டு | அணி இலக்கணம் | |
| | | வாழ்வியல் | திருக்குறள் | |
| | | அலகு தேர்வு -2 | | |
| 3. | மனிதம், ஆளுமை **மானுடம் வெல்லும்** | கவிதைப்பேழை | மலைப்பொழிவு | 61-90 |
| | | | தன்னை அறிதல் | |
| | | உரைநடை உலகம் | கண்ணியமிகு தலைவர் | |
| | | விரிவானம் | பயணம் | |
| | | கற்கண்டு | ஆகுபெயர் | |
| | | வாழ்வியல் | திருக்குறள் | |
| | | அலகு தேர்வு -3 | | |
| | சுராவின் மாதிரி மூன்றாம் பருவ பொதுத் தொகுத்தறித் தேர்வு | | | |




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

# TO ORDER WITH US

## SCHOOLS and TEACHERS:

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

## DIRECT DEPOSIT

| | |
|---|---|
| A/c Name : **Sura Publications**<br>Our A/c No. : **36550290536**<br>Bank Name : **STATE BANK OF INDIA**<br>Bank Branch : PADI<br>IFSC : SBIN0005083 | A/c Name : **Sura Publications**<br>Our A/c No. : **21000210001240**<br>Bank Name : **UCO BANK**<br>Bank Branch : Anna Nagar West<br>IFSC : UCBA0002100 |
| A/c Name : **Sura Publications**<br>Our A/c No. : **6502699356**<br>Bank Name : **INDIAN BANK**<br>Bank Branch : ASIAD COLONY<br>IFSC : IDIB000A098 | A/c Name : **Sura Publications**<br>Our A/c No. : **1154135000017684**<br>Bank Name : **KVB BANK**<br>Bank Branch : Anna Nagar<br>IFSC : KVBL0001154 |

After Deposit, please send challan and order to our address.
email : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**.

The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

## STUDENTS :

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar,
Chennai - 600 040.
Phones : 044-26162173, 26161090.
Mobile : 96001 75757/ 81242 01000/81243 01000.
email : orders@surabooks.com Website : www.surabooks.com



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

# மனப்பாடச் செய்யுள்

**இயல் – 1**

## விருந்தோம்பல்

மாரியொன்று இன்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு – நீர்உலையுள்
பொன்திறந்து கொண்டு புகாவா நல்கினாள்
ஒன்றாகு முன்றிலோ இல்.

– முன்றுறை அரையனார்

**இயல் – 2**

## புதுமை விளக்கு

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் – செய்ய
சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர்ஆழி நீங்குகவே என்று.

– பொய்கை ஆழ்வார்

## அறம் என்னும் கதிர்

இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

– முனைப்பாடியார்

## திருக்குறள்

### வினைசெயல் வகை

2. வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

### நாடு

5. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

## பெருமை

9. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். – திருவள்ளுவர்

## மலைப்பொழிவு

வாயும் வயிறும் ஆசையில் விழுந்தால்
வாழ்க்கை பாலைவனம் – அவர்
தூய மனத்தில் வாழ நினைத்தால்
எல்லாம் சோலைவனம்!

தலையும் வாட்டிப் பிறரையும் வாட்டும்
சண்டை சச்சரவு – தினம்
தன்னாடு என்றும் பிறர்நாடு என்றும்
பேசும் பொய்யுறவு!

இமைக்கும் போதில் ஆயிரம் போட்டி
எத்தனை வீண்கனவு – தினம்
இவை இல்லாது அமைதிகள் செய்தால்
இதயம் மலையளவு! – கண்ணதாசன்

☆ ☆ ☆



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

**இயல் 1** **நயத்தகு நாகரிகம்**

# விருந்தோம்பல்

**கவிதைப்பேழை**

## நூல் வெளி

**பழமொழி நானூறு** நூலின் ஆசிரியர் **முன்றுறை அரையனார்** ஆவார். இவர் கி.பி. (பொ.ஆ.) நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பர். பழமொழி நானூறு நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல் மூலம் இவர் சமண சமயத்தைச் சேர்ந்தவர் என அறிய முடிகிறது.

பழமொழி நானூறு பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இது நானூறு பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி இடம் பெற்றிருப்பதால் இது பழமொழி நானூறு என்னும் பெயர்பெற்றது. இந்நூலின் ஒரு பாடல் இங்குத் தரப்பட்டுள்ளது.

## பாடலின் பொருள்

மழையின்றி வறட்சி நிலவிய காலத்தில், பாரி மகளிரான அங்கவை, சங்கவை ஆகியோரிடம் பாணர்கள் இரந்து நின்றனர். பாரிமகளிர் உலைநீரில் பொன் இட்டு அவர்களுக்குத் தந்தனர். அதனால் பொருள் ஏதும் இல்லாத வீடு எதுவும் இல்லை என்பதை அறியலாம்.

இப்பாடலில் இடம் பெற்றுள்ள பழமொழி **ஒன்றாகு முன்றிலோ இல்** என்பதாகும். ஒன்றுமில்லாத வீடு எதுவுமில்லை என்பது இதன் பொருள்.

### சொல்லும் பொருளும் :

1. மாரி – மழை
2. மடமகள் – இளமகள்
3. வறந்திருந்த – வறண்டிருந்த
4. நல்கினாள் – கொடுத்தாள்
5. புகவா – உணவாக
6. முன்றில் – வீட்டின் முன் இடம் (திண்ணை). இங்கு வீட்டைக் குறிக்கிறது.

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **மரம் வளர்த்தால் ............................ பெறலாம்.**

அ) மாறி ஆ) மாரி இ) காரி ஈ) பாரி **[விடை: ஆ) மாரி]**

2. **'நீருலையில்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...................... .**

அ) நீரு + உலையில் ஆ) நீர் + இலையில்

இ) நீர் + உலையில் ஈ) நீரு + இலையில்

**[விடை: இ) நீர் + உலையில்]**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**சொல்லும் பொருளும் :**

1. குழி – நில அளவைப்பெயர்
2. சீலை – புடவை
3. சாண் – நீட்டல் அளவைப்பெயர்
4. மடை – வயலுக்கு நீர் வரும் வழி
5. மணி – முற்றிய நெல்
6. கழுலுதல் – உதிர்தல்
7. சும்மாடு – பாரம் சுமப்பவர்கள் தலையில் வைத்துக் கொள்ளும் துணிச்சுருள்

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **உழவர் சேற்று வயலில் ............................ நடுவர்.**
   அ) செடி ஆ) பயிர் இ) மரம் ஈ) நாற்று
   [விடை: ஈ) நாற்று]

2. **வயலில் விளைந்து முற்றிய நெற்பயிர்களை ..................... செய்வர்.**
   அ) அறுவடை ஆ) உழவு
   இ) நடவு ஈ) விற்பனை [விடை: அ) அறுவடை]

3. **'தேர்ந்தெடுத்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............................ .**
   அ) தேர் + எடுத்து ஆ) தேர்ந்து + தெடுத்து
   இ) தேர்ந்தது + அடுத்து ஈ) தேர்ந்து + எடுத்து
   [விடை: ஈ) தேர்ந்து + எடுத்து]

4. **'ஓடை + எல்லாம்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ........................... .**
   அ) ஓடைஎல்லாம் ஆ) ஓடையெல்லாம்
   இ) ஓட்டையெல்லாம் ஈ) ஓடெல்லாம் [விடை: ஆ) ஓடையெல்லாம்]

**பொருத்துக**

| | | | விடைகள் |
|---|---|---|---|
| 1. | நாற்று | – பறித்தல் | நடுதல் |
| 2. | நீர் | – அறுத்தல் | பாய்ச்சுதல் |
| 3. | கதிர் | – நடுதல் | அறுத்தல் |
| 4. | களை | – பாய்ச்சுதல் | பறித்தல் |

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores



## தெரிந்து தெளிவோம்

அறுவடை செய்த நெற்கதிர்களைக் களத்தில் அடித்து நெல்லைப் பிரிப்பர். நெல்தாளில் எஞ்சியிருக்கும் நெல்மணிகளைப் பிரிப்பதற்காக மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்வர். இதற்குப் போரடித்தல் என்று பெயர்.

மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல்லென்று
ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை – **நாட்டுப்புறப்பாடல்**

## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக.**

1. நாட்டுப்புறப் பாடல்களை <u>மலை அருவி</u> என்னும் நூலில் கி.வா.ஜகந்நாதன் தொகுத்துள்ளார்.
2. 'குழி' என்பது <u>நில</u> அளவைப் பெயர்.
3. 'சாண்' என்பது <u>நீட்டல்</u> அளவைப் பெயர்.
4. நெற்பயிர் நடுவதற்கான இடைவெளி <u>ஒரு சாண்.</u>

**விடையளி :**

**1. வாய்மொழி இலக்கியம் - குறிப்பு வரைக.**

நாட்டுப்புறங்களில் உழைக்கும் மக்கள் தங்கள் களைப்புத் தெரியாமல் இருப்பதற்காகப் பாடும் பாடலே நாட்டுப்புறப் பாடல் எனப்படுகிறது. இதனை வாய்மொழி இலக்கியம் என்றும் வழங்குவர்.

**2. போரடித்தல் என்றால் என்ன?**

(i) அறுவடை செய்த நெற்கதிர்களைக் களத்தில் அடித்து நெல்லைப் பிரிப்பர்.
(ii) நெல்தாளில் எஞ்சியிருக்கும் நெல்மணிகளைப் பிரிப்பதற்காக மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்வர். இதற்குப் போரடித்தல் என்று பெயர்.

**3. போரடித்தல் பற்றிப் பாடும் நாட்டுப்புறப் பாடலை எழுதுக.**

"மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல்லென்று
ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை

என்ற பாடல் போரடித்தல் பற்றிக் குறிப்பிடுகிறது.

**4. சும்மாடு என்றால் என்ன?**

'பாரம் சுமப்பவர்கள் தலையில் வைத்துக் கொள்ளும் துணிச்சுருள்' சும்மாடு எனப்படும்.

**5. நாற்றுப் பறிக்கும்போது ஆண்களும் பெண்களும் என்ன செய்தனர்?**

நாற்றுப் பறிக்கும்போது ஆண்களும் பெண்களும் வயல் வரப்பில் உள்ள நண்டுகளையும் பிடித்தனர்.

☆ ☆ ☆




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores



(iii) அரசரால் தண்டிக்கப்பட்டவர்கள் சிறை வைக்கப்பட்டதால் பெயர்பெற்ற காவற்புரைத் தெரு உள்ளது.

(iv) தானியங்களை விற்கும் வீதியான கூழைக்கடை (கூலம் – தானியம்), பொன் நாணயங்களை உருவாக்கும் பணியாளர்கள் வாழ்ந்த பகுதி அக்கசாலை, பெரு வணிகம் நடைபெற்ற இடமான பேட்டை என்னும் ஊர் உள்ளது.

(v) இத்தகு சிறப்பு மிகுந்த நகர அமைப்புகளைக் கொண்டு காலத்தால் புகழ்பெற்று நிற்கிறது திருநெல்வேலி நகரம்.

## சிந்தனை வினா

**மக்கள் மகிழ்ச்சியாக வாழ ஒரு நகரம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**

**மக்கள் மகிழ்ச்சியாக வாழ ஒரு நகரம் :**

(i) மக்கள் ஆண்டு முழுவதும் தண்ணீர் பஞ்சம் இன்றி வாழ உதவும் நீர்நிலைகளைப் பாதுகாக்க வேண்டும்.

(ii) மழைநீர் வீணாகக் கடலில் சென்று கலக்காமல் ஆங்காங்கு குளங்கள் இருக்க வேண்டும்.

(iii) அனைத்து வீடுகளிலும் மழைநீர் சேகரிப்புத் தொட்டி அமைத்திருக்க வேண்டும்.

(iv) மாணவர்கள் பள்ளிக்கு நீண்ட தூரம் செல்லாமல் மக்கள் தொகைக்கு ஏற்ப பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் இருக்க வேண்டும்.

(v) கோவில்கள் மற்றும் நூலகம் இருக்க வேண்டும்.

(vi) ஆங்காங்கு பூங்காக்கள் அமைத்து மரம் செடிகளை வளர்க்க வேண்டும். குழந்தைகள் விளையாடுவதற்கும், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உடற்பயிற்சிக்கும் நடைப் பயிற்சிக்கும் உதவும்படி அமைக்க வேண்டும்.

(viii) சிறந்த போக்குவரத்து வசதிக்குச் சாலைகள் நன்கு அமைக்க வேண்டும்.

(ix) சிறந்த மருத்துவனைகள் இருக்க வேண்டும்.

(x) சாலையோரங்களில் மரங்கள் வளர்க்க வேண்டும்.

(xi) பலவகையான வணிகம் நடைபெற வேண்டும்.

(xii) மேற்கூறிய அனைத்தும் மக்களை மகிழ்ச்சியாக வாழ வைக்கும்.

## கற்பவை கற்றபின்

**1. உங்களுடைய மாவட்டத்தில் உள்ள சுற்றுலா இடங்கள் பற்றிய செய்திகளைத் தேடித் தொகுக்க.**

**எனது மாவட்டத்தில் உள்ள சுற்றுலா இடங்கள் :**

என்னுடைய மாவட்டம் சென்னை. இது நம் மாநிலத்தின் தலைநகரம் ஆகும். இங்கு பார்க்க வேண்டிய இடங்கள் பல உள்ளன. இங்குள்ள மெரினா கடற்கரை, உலகிலேயே மிக நீண்ட கடற்கரைகளில் இரண்டாவது இடத்தைப் பெறுகிறது. சென்னை வாசிகள் ஆசையோடு பொழுதுபோக்கி மகிழும் அருமையான திறந்த வெளி இடமாகும்.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores



**(vi) திருநெல்வேலி மாநகராட்சி:**

| | |
|---|---|
| நகரம் உருவாக்கப்பட்ட நாள் | : 1 நவம்பர் 1866 |
| மாநகராட்சியாக மேம்படுத்தப்பட்ட ஆண்டு | : 1994 |
| நிர்வாக மண்டலங்கள் | : 4 |
| நிர்வாக மண்டலங்களின் பெயர்கள் | : தச்சநல்லூர், பாளையம்கோட்டை, மேலப்பாளையம், திருநெல்வேலி. |
| வார்டுகளின் எண்ணிக்கை | : 55 |
| மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின் படி) | : 4,74,838 |

**(vii) திருப்பூர் மாநகராட்சி:**

| | |
|---|---|
| நகரம் உருவாக்கப்பட்ட நாள் | : 1 டிசம்பர் 1947(பஞ்சாயத்து யூனியனாக) |
| மாநகராட்சியாக மேம்படுத்தப்பட்ட ஆண்டு | : 2008 |
| நிர்வாக மண்டலங்கள் | : 4 |
| நிர்வாக மண்டலங்களின் பெயர்கள் | : வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு. |
| வார்டுகளின் எண்ணிக்கை | : 60 |
| மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின் படி) | : 4,66,998 |

**(viii) ஈரோடு மாநகராட்சி:**

| | |
|---|---|
| நகரம் உருவாக்கப்பட்ட ஆண்டு | : 1871 |
| மாநகராட்சியாக மேம்படுத்தப்பட்ட ஆண்டு | : 2008 |
| நிர்வாக மண்டலங்கள் | : 4 |
| நிர்வாக மண்டலங்களின் பெயர்கள் | : சூரம்பட்டி, காசிபாளையம், வீரப்பன்சத்திரம், பெரிய சேமூர். |
| வார்டுகளின் எண்ணிக்கை | : 60 |
| மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின் படி) | : 4,44,782 |

**(ix) வேலூர் மாநகராட்சி:**

| | |
|---|---|
| நகரம் உருவாக்கப்பட்ட நாள் | : 1 நவம்பர் 1866 |
| மாநகராட்சியாக மேம்படுத்தப்பட்ட நாள் | : 1 ஆகஸ்ட் 2008 |
| நிர்வாக மண்டலங்கள் | : 4 |
| நிர்வாக மண்டலங்களின் பெயர்கள் | : காட்பாடி, வேலூர்கோட்டை, சத்துவாச்சாரி, செண்பகம். |
| வார்டுகளின் எண்ணிக்கை | : 60 |
| மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின் படி) | : 4,21,327 |

**(x) தூத்துக்குடி மாநகராட்சி:**

| | |
|---|---|
| நகரம் உருவாக்கப்பட்ட நாள் | : 1 நவம்பர் 1866 |
| மாநகராட்சியாக மேம்படுத்தப்பட்ட நாள் | : 5 ஆகஸ்ட் 2008 |
| நிர்வாக மண்டலங்கள் | : 4 |
| நிர்வாக மண்டலங்களின் பெயர்கள் | : வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு. |
| வார்டுகளின் எண்ணிக்கை | : 60 |
| மக்கள் தொகை (2011 கணக்கெடுப்பின் படி) | : 3,56,094 |




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores



அண்ணாமலையார் கழுகுமலை முருகன் மேல் காவடிச் சிந்தைப் பாடியுள்ளார். சங்கரன் கோவிலில் உள்ள கோமதித் தாயைப் பற்றி அழகிய சொக்கநாதர் பக்தியோடு பாடியுள்ளார்.

கரிவலம் வந்த நல்லூர் என்னும் பெயர் கொண்ட ஸ்தலம் கருவை நல்லூர் ஆகும். இத்தலத்தைப் பற்றி திருக்கருவை வெண்பா அந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, கலித்துறை அந்தாதி ஆகிய நூல்களில் புலவர் ஒருவர் பாடியுள்ளார்.

குற்றால மலையின் இயற்கையைக் கண்ட திருஞான சம்பந்தர் 'நுண் துளி தூங்கும் குற்றாலம்' என்று பாடியுள்ளார். இத்தலத்தைப் பற்றி மாணிக்கவாசகரும் 'உற்றாரை யான்வேண்டேன்' என்ற பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

திரிகூடராசப்பக் கவிராயர் தம் குற்றாலக் குறவஞ்சியில் இம்மலையின் வளத்தைக் குறி சொல்லுகின்ற பெண் கூறுவது போல் பாடியுள்ளார்.

இத்தகு பெருமைமிக்க திருநெல்வேலியைப் பற்றியும் அங்கு வாழ்ந்த புலவர்களின் புலமையையும் நினைவில் கொள்வோம்.

## கற்பவை கற்றபின்

**1. உங்களுக்குப் பிடித்த கவிதை ஒன்றைப் பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**மாணவன் 1** : இன்று நான் நூலகம் செல்லலாம் என்று புறப்பட்டேன். நல்ல மழை பெய்ததால் செல்லவில்லை.

**மாணவன் 2** : எதற்கு நூலகத்திற்கு செல்ல வேண்டும்?

**மாணவன் 1** : நான் எப்போதும் விடுமுறை என்றால் நூலகத்திற்குச் செல்வேன். எனக்குப் பிடித்த நூல்களைப் படித்து குறிப்பு எழுதிக் கொள்வேன்.

**மாணவன் 2** : அப்படியா! நீ எழுதிய குறிப்பிலிருந்து எதைப் பற்றியாவது எனக்குக் கூறுகிறாயா?

**மாணவன் 1** : தாராளமாகக் கூறுகிறேன். உவமைக் கவிஞர் என்று போற்றப்படும் சுரதாவின் கவிதை நூலில் 'இன்பம்' என்ற தலைப்பில் உள்ள கவிதை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

"பழந்தமிழ் கற்றல் இன்பம்
பலநாடு சுற்றல் இன்பம்
எழுந்திடு புதுமை தன்னை
ஏற்றிடல் வாழ்வுக் கின்பம்.
..............................
.............................
பெற்றதை வழங்கி வாழும்
பெருங்குணம் பெறுதல் இன்பம்.

**மாணவன் 2** : பாடலின் மிகவும் எளிமையாக இருக்கிறதே.

**மாணவன் 1** : ஆமாம் பாடல் மிகவும் எளிமையானது. பொருள் பொதிந்த பாடல்.

**மாணவன் 2** : பாடலின் பொருளைக் கூறு.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores


"ஓரான் ஓரான் தோட்டத்திலே
ஒருவன் போட்டது வெள்ளரிக்காய்
காசுக்கு ரெண்டு விற்கச் சொல்லிக்
காயிதம் போட்டானாம் வெள்ளைக்காரன்
வெள்ளைக்காரன் பணம் வெள்ளிப்பணம்
வேடிக்கைக் காட்டுதாம் சின்ன பணம்."

இவ்வாறு நாட்டுப்புற இலக்கியங்கள் பல செய்திகளை எடுத்துக் கூறுகின்றன. இவ்விலக்கியம் எளிமையான சொற்களால் அமைக்கப்பட்டுள்ளதால், அனைவராலும் இதனை படித்து உணர முடியும். எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

## சொல்லக் கேட்டு எழுதுக

1. மாடுகள் கொண்டு நிலத்தை உழுதனர்.
2. நீர்வளம் மிக்க ஊர் திருநெல்வேலி.
3. நெல்லையில் தமிழ்க் கவிஞர் பலர் வாழ்ந்தனர்.
4. அகத்தியர் வாழ்ந்த மலை பொதிகை மலை.
5. இல்லாத பொருளை உவமையாக்குவது இல்பொருள் உவமை அணி.

## பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க

பனை மரமே பனை மரமே
ஏன் வளர்ந்தே இத் தூரம்?
குடிக்கப் பதனியானேன்!
கொண்டு விற்க நுங்கானேன்!
தூரத்து மக்களுக்குத்
தூதோலை நானானேன்!
அழுகிற பிள்ளைகட்குக்
கிலுகிலுப்பை நானானேன்!
கைதிரிக்கும் கயிறுமானேன்!
கன்றுகட்டத் தும்புமானேன்!

– நாட்டுப்புறப்பாடல்

**வினாக்கள் :**

**1. பனை மரம் தரும் உணவுப்பொருள்கள் யாவை?**

பதனி, நுங்கு ஆகியவை பனை மரம் தரும் உணவுப் பொருள்களாகும்.

**2. பனை மரம் யாருக்குக் கிலுகிலுப்பைத் தரும்?**

பனை மரமானது, அழுகிற பிள்ளைக்குக் கிலுகிலுப்பையைத் தருகிறது.

**3. 'தூதோலை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக.**

தூதோலை = தூது + ஓலை.




Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores


## விடைகள்

**இடமிருந்து வலம்**

1. திருப்பூர்
2. உதகை
6. சென்னை
13. தஞ்சாவூர்

**வலமிருந்து இடம்**

3. திருச்சி
5. ஏற்காடு
8. காரைக்கால்
11. ஈரோடு

**மேலிருந்து கீழ்**

1. திண்டுக்கல்
3. திருவாரூர்
4. கன்னியாகுமரி
7. முண்டந்துறை

**கீழிருந்து மேல்**

9. சிவகாசி
10. மதுரை
12. கொடைக்கானல்
14. விருதுநகர்

### தொடருக்குப் பொருத்தமான உவமையை எடுத்து எழுதுக

1. என் தாயார் என்னை ............... காத்து வளர்த்தார். (கண்ணை இமை காப்பது போல/ தாயைக் கண்ட சேயைப் போல) [**விடை: கண்ணை இமை காப்பது போல**]
2. நானும் என் தோழியும் ................ இணைந்து இருப்போம். (இஞ்சி தின்ற குரங்கு போல/ நகமும் சதையும் போல) [**விடை: நகமும் சதையும் போல**]
3. திருவள்ளுவரின் புகழை .............. உலகமே அறிந்துள்ளது. (எலியும் பூனையும் போல/ உள்ளங்கை நெல்லிக்கனி போல) [**விடை: உள்ளங்கை நெல்லிக்கனி போல**]
4. அப்துல் கலாமின் புகழ் ..................... உலகெங்கும் பரவியது. (குன்றிமேலிட்ட விளக்கு போல/ குடத்துள் இட்ட விளக்கு போல) [**விடை: குன்றின்மேலிட்ட விளக்கு போல**]
5. சிறு வயதில் நான் பார்த்த நிகழ்ச்சிகள்................... என் மனத்தில் பதிந்தன. (கிணற்றுத்தவளை போல/ பசுமரத்தாணி போல) [**விடை: பசுமரத்தாணி போல**]

### கொடுக்கப்பட்டுள்ள ஊரின் பெயர்களில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக

(எ.கா.) திருநெல்வேலி – திரு, நெல், வேலி, வேல்

1. நாகப்பட்டினம் – நாகம், பட்டினம், படி, பட்டி, கப்பம், நாடி, நா
2. கன்னியாகுமரி – கன்னி, குமரி, கனி, கரி, யா, கயா
3. செங்கல்பட்டு – செங்கல், பட்டு, படு, செல், பல், கல், பகல், பகட்டு
4. உதகமண்டலம் – மண், மண்டலம், மடம், உண், கண், தடம், கமண்டலம், கடம்
5. பட்டுக்கோட்டை – பட்டு, கோட்டை, கோடை, படை, பட்டை, கோ, கோடு




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores

இயல் 2 ஒப்புரவு ஒழுகு

# புதுமை விளக்கு

கவிதைப்பேழை

பாடல் :

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் – செய்ய
சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர்ஆழி நீங்குகவே என்று.

– பொய்கை ஆழ்வார்

## பாடலின் பொருள்

பூமியை அகல்விளக்காகவும், ஒலிக்கின்ற கடலை நெய்யாகவும், வெப்பக்கதிர் வீசும் கதிரவனைச் சுடராகவும் கொண்டவன் திருமால். சிவந்த ஒளிவீசும் சக்கரத்தை உடைய அவனது திருவடிகளுக்கு என் துன்பக் கடல் நீங்க வேண்டிப் பாடலால் மாலை சூட்டினேன்.

## நூல் வெளி

**பொய்கையாழ்வார்** காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள **திருவெஃகா** என்னும் ஊரில் பிறந்தவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் உள்ள **முதல் திருவந்தாதி** இவர் பாடியதாகும். அதன் முதல் பாடல் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

## சொல்லும் பொருளும் :

1. வையம் – உலகம்
2. வெய்ய – வெப்பக்கதிர் வீசும்
3. சுடர்ஆழியான் – ஒளிவிடும் சக்கரத்தை உடைய திருமால்
4. இடர்ஆழி – துன்பக் கடல்
5. சொல் மாலை – பாமாலை

பாடல் :

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா – நன்புஉருகி
ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்.

– பூதத்தாழ்வார்

## பாடலின் பொருள்

ஞானத்தமிழ் பயின்ற நான் அன்பையே அகல்விளக்காகவும், ஆர்வத்தையே நெய்யாகவும், இனிமையால் உருகும் மனத்தையே இடுகின்ற திரியாகவும் கொண்டு, ஞான ஒளியாகிய சுடர் விளக்கை மனம் உருக திருமாலுக்கு ஏற்றினேன்.

## நூல் வெளி

**பூதத்தாழ்வார்** சென்னையை அடுத்துள்ள **மாமல்லபுர**த்தில் பிறந்தவர். இவர் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் **இரண்டாம் திருவந்தாதி**யை இயற்றியுள்ளார். நம் பாடப் பகுதி இரண்டாம் திருவந்தாதியில் உள்ள முதல் பாடலாகும்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores


## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக.**

1. உள்ளத் தூய்மையோடு **நன்னெறியில்** நடப்பதே சான்றோரின் இயல்பு.
2. பொய்கையாழ்வார் பிறந்த ஊர் காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள **திருவெஃகா.**
3. பொய்கையாழ்வார் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் உள்ள **முதல்** திருவந்தாதியைப் பாடியுள்ளார்.
4. பூதத்தாழ்வார் பிறந்த ஊர் **மாமல்லபுரம்.**
5. நாலாயிரத்திவ்வியப் பிரபந்ததில் இரண்டாம் திருவந்தாதியைப் பாடியவர் **பூதத்தாழ்வார்.**
6. முதலாழ்வார்கள் **பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்.**
7. திருமாலைப் போற்றிப் பாடியவர்கள் **பன்னிரு ஆழ்வார்கள்.**
8. ஆழ்வார்கள் மொத்தம் **பன்னிருவர்.**
9. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு **நாலாயிரத் திவ்விய பிரபந்தம்.**
10. நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தைத் தொகுத்தவர் **நாதமுனி.**
11. பொய்கையாழ்வார் **கடலை** நெய்யாகவும், பூதத்தாழ்வார் **ஆர்வத்தை** நெய்யாகவும் பாடியுள்ளார்.
12. அன்பை அகல்விளக்காகப் பாடியவர் **பூதத்தாழ்வார்.**
13. பூமியை அகல்விளக்காகப் பாடியவர் **பொய்கையாழ்வார்.**

**விடையளி :**

**1. அந்தாதி - குறிப்பு எழுதுக**

(i) ஒரு பாடலின் இறுதி எழுத்தோ, அசையோ, சொல்லோ அடுத்து வரும் பாடலுக்கு முதலாக அமைவதை அந்தாதி என்பர்.

(ii) இவ்வாறு அந்தாதியாக அமையும் பாடல்களைக் கொண்டு அமைவது அந்தாதி என்னும் சிற்றிலக்கிய வகையாகும்.

**2. பொய்கையாழ்வார் குறிப்பு எழுதுக.**

(i) பொய்கையாழ்வார் காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள திருவெஃகா என்னும் ஊரில் பிறந்தவர்.

(ii) நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தில் உள்ள முதல் திருவந்தாதியைப் பாடியவர்.

**3. பூதத்தாழ்வார் குறிப்பு வரைக.**

(i) பூதத்தாழ்வார் சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரத்தில் பிறந்தவர்.

(ii) இவர் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் இரண்டாம் திருவந்தாதியைப் பாடியவர்.

☆ ☆ ☆




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores



## எதிர்ச்சொற்களைப் பொருத்துக

| | | | விடைகள் |
|---|---|---|---|
| 1. | எளிது | – புரவலர் | அரிது |
| 2. | ஈதல் | – அரிது | ஏற்றல் |
| 3. | அந்நியர் | – ஏற்றல் | உறவினர் |
| 4. | இரவலர் | – உறவினர் | புரவலர் |

## தொடர்களில் அமைத்து எழுதுக

1. **குறிக்கோள்** – நான் மருத்துவர் ஆகவேண்டும் என்பது என் **குறிக்கோள்.**
2. **கடமைகள்** – பெற்றோரைப் பாதுகாப்பது இன்றியமையாத **கடமைகளுள்** ஒன்று.
3. **வாழ்நாள்** – **வாழ்நாள்** முழுவதும் உண்மையைப் பேசி உண்மைக்கு இலக்கணம் ஆனவர் அரிச்சந்திரன்.
4. **சிந்தித்து** – **சிந்தித்து**ச் செயலாற்றினால் நாம் சிறப்படையலாம்.

## குறுவினா

1. **பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது?**

பொருளீட்டுவதைவிடப் பெரிய செயல் அதை முறையாக அனுபவிப்பதும், கொடுத்து மகிழ்வதும் ஆகும்.

2. **பொருளீட்டுவதன் நோக்கமாகக் குன்றக்குடி அடிகளார் கூறுவது யாது?**

**பொருளீட்டுவதன் நோக்கம் :** மற்றவர்களுக்கு வழங்கி, மகிழ்வித்து மகிழ, வாழ்வித்து வாழப் பொருள் தேவை. இதுவே பொருளீட்டுவதன் நோக்கம் என குன்றக்குடி அடிகளார் கூறுகிறார்.

## சிறுவினா

1. **ஒப்புரவுக்கு அடிகளார் தரும் விளக்கம் யாது?**

**ஒப்புரவு :**

(i) ஒருவர் செய்யும் செயலானது அது தரும் பயனைவிட, செய்பவரின் மனப்பாங்கு, உணர்வு ஆகியவற்றின் அடிப்படையிலேயே மதிப்பிடப்படுகிறது. தரத்தைக் காட்டுகிறது. ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுதல் மட்டும் போதாது.

(ii) தற்காப்புக்காகவும் இலாபத்திற்காகவும் உதவி செய்யலாம். இத்தகைய உதவிகள் ஒருவகையில் வாணிகம் போலத்தான்.

(iii) அதே உதவியைக் கட்டுப்பாட்டு உணர்வுடன், உதவி பெறுபவரை உறவுப்பாங்கில் எண்ணி, உரிமை உடையவராக நினைந்து, உதவிசெய்வதற்குப் பதில் அவரே எடுத்துக் கொள்ளும் உரிமையை வழங்குதல் ஒப்புரவு ஆகும்.




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores


## தெரிந்து தெளிவோம்

**ஊருணி நீர்நிறைந்து அற்றே உலகவாம்**
**பேரறி வாளன் திரு. (குறள். 215)**

உலகினர் விரும்புமாறு உதவி செய்து வாழ்பவரது செல்வமானது ஊருணியில் நிரம்பிய நீர்போலப் பலருக்கும் பயன்படும்.

**பயன்மரம் உள்ளூர்ப் பழுத்துஅற்றால் செல்வம்**
**நயனுடை யான்கண் படின். (குறள். 216)**

நற்பண்பு உடையவரிடம் செல்வம் சேர்வது ஊருக்குள் பழமரத்தில் பழங்கள் பழுத்திருப்பதைப் போன்றது.

## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக.**

1. வாழ்க்கை **குறிக்கோள்** உடையது.
2. மக்கள் பணியை இறைப் பணியாக எண்ணித் தம் வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்தவர் **தவத்திரு குன்றக்குடி அடிகளார்.**
3. குன்றக்குடி அடிகளார் எழுதிய நூல்கள் **நாயன்மார் அடிச்சுவட்டில், குறட்செல்வம், ஆலயங்கள் சமுதாய மையங்கள்.**
4. குன்றக்குடி அடிகளார் நடத்திய இதழ்கள் **அருளோசை, அறிக அறிவியல்.**
5. 'செல்வத்துப் பயனே ஈதல்' என்று பாடிய நூல் **புறநானூறு.**
6. வறுமையைப் **பிணி** என்றும், செல்வத்தை **மருந்து** என்றும் கூறுவது தமிழ் மரபு.
7. 'உலகம் உண்ண உண், உடுத்த உடுப்பாய்' என்று பாடியவர் **பாவேந்தர் பாரதிதாசன்.**

**குறுவினா :**

1. **திருவள்ளுவரின் வாழும் நெறி யாது?**

ஒருவர் எல்லாருக்காகவும் எல்லாரும் ஒருவருக்காவும் என்னும் பொதுவுடைமை நெறியே திருவள்ளுவரின் வாழும் நெறியாகும்.

2. **பொருளீட்டலுக்கு உரிய கரு எது?**

மற்றவர்களுக்கு வழங்கி, மகிழ்வித்து மகிழ, வாழ்வித்து வாழப் பொருள் தேவை என்பதே பொருளீட்டலுக்கு உரிய கரு ஆகும்.

3. **சமூகத்தின் பொதுநிலை என்று குன்றக்குடி அடிகளார் கூறுவது யாது?**

இரப்பார்க்கு இல்லென்று இயைவது கரத்தல் அறிவியல் அன்று, அறமும் அன்று. செய்வது செய்து பொருள் ஈட்டி இரப்பார் துன்பத்தை மாற்றுவதே சமூகத்தின் பொதுநிலை என்று குன்றக்குடி அடிகளார் கூறுகிறார்.




Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores


உடனே, குரு "நீ நினைப்பது எனக்குப் புரிகிறது குழந்தாய்! ஆனால், நான் ஏமாந்து போனது தெரிந்தால் எதிர்காலத்தில் உண்மையிலேயே யாராவது சாலையில் மயங்கிக் கிடந்தால்கூட அவர்களுக்கு யாரும் உதவ முன்வரமாட்டார்கள். புரிகிறதா? குறுகிய தன்னலத்துக்காக நல்ல கோட்பாடுகளை அழித்துவிடக்கூடாது. இதை நீ தெரிந்துகொள்" என்று கூறினார்.

குதிரையைத் திருடியவன் குருவின் பெருந்தன்மையை உணர்ந்து வெட்கித் தலை குனிந்தான்.

## கற்பவை கற்றபின்

1. **ஜென் கதைகளில் வேறு சிலவற்றை அறிந்து வந்து வகுப்பறையில் பகிர்க.**

**ஜென் கதை – வெற்றியைத் தீர்மானிப்பது கடவுளா?**

இரு நாட்டுப் படைகளுக்கும் இடையே வெகு மும்முரமாக சண்டை நடந்து கொண்டிருந்தது.

எதிரி நாட்டுப் படையிடம் கிட்டத்தட்ட தோற்றுவிட்ட நிலை. ஆனாலும் தாய்நாட்டுப் படைத்தளபதிக்கு போரை இழக்க மாட்டோம் என்ற அசாத்திய நம்பிக்கை. ஆனால் துணைத் தளபதி உள்ளிட்ட அவன் வீரர்களுக்கு அந்த நம்பிக்கை கொஞ்சம்கூட இல்லை. எல்லோரும் ஓடுவதில் குறியாக இருந்தனர்.

என்னதான் நம்பிக்கை இருந்தாலும் வீரர்களில்லாமல் தனி ஆளாய் என்ன செய்ய இயலும்? கடைசி நாள் சண்டை. போர்க்களத்துக்குப் போகும் வழியில் ஒரு கோயிலைக் கண்டார்கள். உடனே தளபதி வீரர்களை அழைத்து, "சரி வீரர்களே... நாம் ஒரு முடிவுக்கு வருவோம். இதோ இந்தக் கோயிலுக்கு முன் ஒரு நாணயத்தைச் சுண்டி விடுகிறேன். அதில் தலைவிழுந்தால் வெற்றி நமக்கே. பூ விழுந்தால் நாம் தோற்பதாக அர்த்தம். இப்படியே திரும்பி விடுவோம். வெற்றியா? தோல்வியா? நமக்கு மேல் உள்ள சக்தி தீர்மானிக்கட்டும்... சரியா?" "ஆ... நல்ல யோசனை. அப்படியே செய்வோம்."

நாணயத்தைச் சுண்டினான் தளபதி. காற்றில் மிதந்து, விர்ரென்று சுழன்று தரையில் விழுந்தது நாணயம்.

தலை...!

வீரர்கள் உற்சாகத்தில் மிதந்தனர். வெற்றி, வெற்றி என்று எக்காளமிட்டபடி போர்க்களம் நோக்கி ஓடினர். வெகு வேகமாக எதிரி நாட்டினருடன் சண்டையிட்டனர்.

அட! என்ன ஆச்சர்யம். அந்த சிறிய படை, எதிரி நாட்டின் பெரும் படையை வீழ்த்திவிட்டது. துணைத் தளபதி வந்தான். "நாம் வென்றுவிட்டோம். கடவுள் தீர்ப்பை மாற்ற முடியாதல்லவா..." என்றான் உற்சாகத்துடன்.

"ஆமாம்... உண்மைதான்" என்று கூறியபடி அந்த நாணயத்தைத் துணைத் தளபதியிடம் கொடுத்தான் தளபதி.

நாணயத்தின் இருபக்கங்களிலும் தலை.

* இக்கதையில் மூலம் நாம் உணர்வது 'தன்னம்பிக்கைதான் வெற்றியின் முதல்படி' என்பதாகும்.




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores


இயல் 2 ஒப்புரவு ஒழுகு

# அணி இலக்கணம்

கற்கண்டு

## மதிப்பீடு

### குறுவினா

**1. உருவக அணியை விளக்குக.**

உவமை வேறு உவமிக்கப்படும் பொருள் வேறு என்று இல்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றும்படி கூறுவது உருவக அணி ஆகும்.

**எ.கா.**

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் – செய்ய
சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர்ஆழி நீங்குகவே என்று

**விளக்கம் :**

இப்பாடலில் பூமி அகல்விளக்காகவும், கடல் நெய்யாகவும், கதிரவன் சுடராகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, இப்பாடல் உருவக அணிக்குச் சான்றாயிற்று.

**2. உருவக அணிக்கும் ஏகதேச உருவக அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?**

| உருவக அணி | ஏகதேச உருவக அணி |
|---|---|
| உவமை வேறு உவமிக்கப்படும் பொருள் வேறு என்று இல்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றும்படி கூறுவது உருவக அணி ஆகும். | கூறப்படும் இரு பொருள்களில் ஒன்றை மட்டும் உருவகப்படுத்தி மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது ஏகதேச உருவக அணி ஆகும். |
| **எ.கா.**<br>வையம் தகளியா வார்கடலே நெய்யாக<br>வெய்ய கதிரோன் விளக்காகச் – செய்ய<br>சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை<br>இடர்ஆழி நீங்குகவே என்று. | **எ.கா.**<br>பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்<br>கருமமே கட்டளைக் கல். (திருக்குறள்) |


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**முடிவுரை :**

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை – பலர் ஒன்று கூடி வாழ்ந்தால் நிறைய நன்மைகள் உண்டு. மகாகவி பாரதியார் 'வந்தே மாதரம்' என்ற தம் கவிதையில், 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வே – நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே' என்ற பாடல் வரிகளுக்கு ஏற்றார்போல் ஒற்றுமையுடன் நாம் வாழ்ந்தால்தான் நம் நாடும் நாமும் முன்னேறலாம்.

## மொழியோடு விளையாடு

### கீழ்க்காணும் படங்கள் சார்ந்த சொற்களை எழுதுக.

| | |
|---|---|
|  | (எ.கா.) கரும்பலகை, வகுப்பறை, சுண்ணக்கட்டி, நாற்காலி, மரங்கள், மேசை, புத்தகம், விளையாட்டு மைதானம், மாணவர்கள், ஆசிரியர்கள் |
|  | (எ.கா.) மரம், நடைபாதை, அடுக்ககம், விளையாட்டு திடல், நீண்ட இருக்கை, செடிகள், பூங்கா. |

**கீழ்க்காணும் சொற்களைப் பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் பயன்படுத்தித் தொடர்கள் உருவாக்குக. (விதை, கட்டு, படி, நிலவு, நாடு, ஆடு)**

1. (எ.கா) விதை
   - **விதை** நெல் வாங்கினான்.
   - சோளம் **விதை**த்தான்.
2. கட்டு
   - கடலில் பயணம் செய்ய **கட்டு**மரம் உதவும்
   - மாட்டைக் கம்பத்தில் **கட்டி**னான்
3. படி
   - சிறுவன் மாடிப்**படி**யில் ஏறினான்.
   - சிறுவன் **படி**த்தான்.
4. நிலவு
   - இரவில் வானத்தில் **நிலவு** தெரியும்.
   - மாநகரத்தில் பரபரப்பான சூழல் **நிலவு**கிறது.

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores


## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. .............. ஒரு நாட்டின் அரணன்று.**

அ) காடு ஆ) வயல் இ) மலை ஈ) தெளிந்த நீர்

[விடை: ஆ) வயல்]

**2. மக்கள் அனைவரும் .................... ஒத்த இயல்புடையவர்கள்.**

அ) பிறப்பால் ஆ) நிறத்தால்

இ) குணத்தால் ஈ) பணத்தால் [விடை: அ) பிறப்பால்]

**3. 'நாடென்ப' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...............**

அ) நான் + என்ப ஆ) நா + டென்ப

இ) நாடு + என்ப ஈ) நாடு + டென்ப [விடை: இ) நாடு + என்ப]

**4. கண் + இல்லது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .......................**

அ) கணிஇல்லது ஆ) கணில்லது

இ) கண்ணில்லாது ஈ) கண்ணில்லது [விடை: ஈ) கண்ணில்லது]

**பின்வரும் குறட்பாக்களில் உவமையணி பயின்றுவரும் குறளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

2. வினையான் வினையாக்கிக் கோடல் தனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

3. கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்.

**விடை:**

வினையான் வினையாக்கிக் கோடல் தனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

### குறுவினா

**1. ஒரு செயலைச் செய்ய எவற்றையெல்லாம் ஆராய வேண்டும்?**

**ஒரு செயலைச் செய்ய ஆராய வேண்டுவன :** வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தகுந்த காலம், மேற்கொள்ளும் செயலின் தன்மை, உரிய இடம் ஆகிய ஐந்தினையும் ஐயம் தீர ஆராய்ந்து ஒரு செயலைச் செய்ய வேண்டும்.




Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

## கூடுதல் வினாக்கள்

**விடையளி :**

**1. 'பெருமை' என்ற தலைப்பில் பாட நூலில் இடம்பெற்ற குறட்பாக்களின் கருத்துகளைக் கூறுக.**

(i) பிறப்பால் மக்கள் அனைவரும் ஒத்த இயல்புடையவர்களே. அவர்கள் செய்யும் நன்மை, தீமையாகியச் செயல்களால் அவர்களது சிறப்பியல்புகள் ஒத்திருப்பதில்லை.

(ii) உயர்ந்த பண்புகளை உடையவர் செய்வதற்கு அரிய செயல்களை உரிய நெறிமுறையில் செய்து முடிப்பர்.

**2. எவ்வாறு வினை செய்ய வேண்டும் என்று குறள் கூறுகிறது?**

(i) வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தகுந்த காலம், மேற்கொள்ளும் செயலின் தன்மை, உரிய இடம் ஆகிய ஐந்தையும் ஐயம் தீர ஆராய்ந்து ஒரு செயலைச் செய்ய வேண்டும்.

(ii) ஒரு யானையைக் கொண்டு மற்றொரு யானையைப் பிடிப்பர். அதுபோல ஒரு செயலைச் செய்யும்போதே அச்செயலால் மற்றொரு செயலையும் செய்து முடித்துக் கொள்ளல் வேண்டும்.

☆ ☆ ☆



www.surabooks.com Padasalai

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores



## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **மனித வாழ்க்கையில் தேவைப்படுவது .....................**

அ) பணம் ஆ) பொறுமை இ) புகழ் ஈ) வீடு

[விடை: ஆ) பொறுமை]

2. **சாந்த குணம் உடையவர்கள் ..................... முழுவதையும் பெறுவர்.**

அ) புத்தகம் ஆ) செல்வம்
இ) உலகம் ஈ) துன்பம் [விடை: இ) உலகம்]

3. **'மலையளவு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................... .**

அ) மலை + யளவு ஆ) மலை + அளவு
இ) மலையின் + அளவு ஈ) மலையில் + அளவு

[விடை: ஆ) மலை + அளவு]

4. **'தன்னாடு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................... .**

அ) தன் + னாடு ஆ) தன்மை + னாடு
இ) தன் + நாடு ஈ) தன்மை + நாடு

[விடை: இ) தன் + நாடு]

5. **இவை + இல்லாது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ......................... .**

அ) இவையில்லாது ஆ) இவைஇல்லாது
இ) இவயில்லாது ஈ) இவஇல்லாது

[விடை: அ) இவையில்லாது]

## பொருத்துக

| | | | விடைகள் |
|---|---|---|---|
| 1. | சாந்தம் | - சிறப்பு | அமைதி |
| 2. | மகத்துவம் | - உலகம் | சிறப்பு |
| 3. | தாரணி | - கருணை | உலகம் |
| 4. | இரக்கம் | - அமைதி | கருணை |

## குறுவினா

1. **இந்த உலகம் யாருக்கு உரியது?**

இந்த உலகம் முழுவதும் சாந்தம் என்னும் அமைதியான பண்புடையவர்களுக்கே உரியது.




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

## சிறுவினா

**குயில் குஞ்சு தன்னம்பிக்கையுடன் வாழத் தொடங்கிய நிகழ்வை எழுதுக.**

**குயில் குஞ்சு தன்னம்பிக்கையுடன் வாழத் தொடங்கிய நிகழ்வு :**

(i) குயில் ஒன்று காக்கையின் கூட்டில் முட்டையிடுகிறது. முட்டையிலிருந்து வெளிவந்த குயில் குஞ்சு தன்னைக் காக்கைக் குஞ்சாக எண்ணிக் காக்கையைப் போலவே கரைய முயல்கிறது.

(ii) தனியே சென்று வாழ அஞ்சுகிறது. ஒரு விடியற்காலையில் 'கூ' என்று கூவியது. தான் குயில் என்பதையும் தன் குரல் இனிமையானது என்பதனையும் உணர்ந்த பிறகு தன்னம்பிக்கையுடன் வாழத் தொடங்குகிறது.

(iii) நாமும் நமது ஆற்றலை உணர்ந்து கொண்டால் வாழ்வில் சாதனைகளைப் புரியலாம் என்பதை இந்நிகழ்வு மூலம் உணரலாம்.

## சிந்தனை வினா

**உங்களிடம் உள்ள தனித்தன்மைகளாக நீங்கள் கருதுவன யாவை?**

**என்னிடம் உள்ள தனித்தன்மைகள் :**

(i) அனைவரிடமும் அன்புடன் பழகுதல்
(ii) பிறருக்கு உதவி செய்தல்
(iii) பகைவரிடமும் அன்பு பாராட்டுதல்
(iv) இன்முகத்துடன் இருத்தல்
(v) இனிமையாகப் பேசுதல்
(vi) பிறர் குறைகளைக் கூறாமை
(vii) பிறருடைய நிறைகளை மட்டும் கூறுதல்
(viii) பெரியோரை மதித்தல்.

## கற்பவை கற்றபின்

**பறவைகள், விலங்குகள் ஆகியவற்றுக்கு உரிய தனித்தன்மைகளைப் பட்டியலிடுக.**

| பறவைகள் | விலங்குகள் |
|---|---|
| 1. இரு கால்களையுடையது. | நான்கு கால்களையுடையது. |
| 2. முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யும். | குட்டிப் போடுவதன் மூலம் இனப் பெருக்கம் செய்யும். |
| 3. இறகுகளால் ஆன சிறகுகளை உடையவை. | வலிமையான உடலமைப்பு கொண்டவை. |
| 4. மென்மையானவைகளாக இருக்கும். | நடக்கும் தன்மையுடையவை. |
| 5. பறக்கும் தன்மையுடையவை. | |

**கூடுதல் வினாக்கள் :**

1. நமது ஆற்றலை உணர்ந்து கொண்டால் நாமும் வாழ்வில் **சாதனைகளைப்** புரியலாம்.

2. **சே. பிருந்தா எழுதிய நூல்கள் யாவை?**

மழை பற்றிய பகிர்தல்கள், வீடு முழுக்க வானம், மகளுக்குச் சொன்ன கதை ஆகிய கவிதை நூல்களை சே.பிருந்தா எழுதியுள்ளார்.

☆ ☆ ☆

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores


## குறுவினா

**1. விடுதலைப் போராட்டத்தில் காயிதே மில்லத் அவர்களின் பங்கு பற்றி எழுதுக.**

**விடுதலைப் போராட்டத்தில் காயிதே மில்லத் அவர்களின் பங்கு :**

விடுதலைப் போராட்டத்தின் போது காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை அறிவித்தார். அவருடைய வேண்டுகோள் காயிதே மில்லத் அவர்களின் மனதில் தீராத விடுதலை வேட்கையை ஏற்படுத்தியது. தமது கல்வியைவிட நாட்டின் விடுதலையே மேலானது என்று எண்ணி ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டார்.

**2. காயிதே மில்லத் அவர்கள் தன் குடும்பத்திலும் எளிமையைக் கடைப்பிடித்தார் என்பதற்குச் சான்றாக உள்ள நிகழ்வை எழுதுக.**

**காயிதே மில்லத் அவர்கள் தன் குடும்பத்திலும் கடைப்பிடித்த எளிமை :**

காயிதே மில்லத் அவர்கள் தம் ஒரே மகனுக்குத் திருமணம் செய்ய முடிவு செய்தார். அவரது இல்லத்திருமணம் ஆடம்பரமாக நிகழும் என எல்லாரும் எண்ணியிருந்தனர். ஆனால் அவர் எவ்வித ஆடம்பரமும் இல்லாமல் மிக எளிமையாகத் தம் மகனின் திருமணத்தை நடத்தினார். பெண் வீட்டாரிடம் மணக்கொடையும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறுவினா

**ஆட்சி மொழி பற்றிய காயிதே மில்லத்தின் கருத்தை விளக்குக.**

**ஆட்சி மொழி பற்றிய காயிதே மில்லத் அவர்களின் கருத்து :**

(i) இந்தியா விடுதலை பெற்ற பிறகு நாட்டின் ஆட்சிமொழியைத் தேர்வு செய்வது தொடர்பான கூட்டம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

(ii) மிகுதியான மக்கள் பேசும் மொழியை ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும் என்று சிலரும் பழமை வாய்ந்த மொழியை ஆட்சி மொழியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சிலரும் பரிந்துரை செய்தனர்.

(iii) ஆனால் காயிதே மில்லத் அவர்கள் "பழமையான மொழிகளிலே ஒன்றைத்தான் ஆட்சிமொழியாக்க வேண்டுமென்றால், முதன்முதலாகப் பேசப்பட்ட மொழிகள் திராவிட மொழிகளில் மிகவும் இலக்கியச் செறிவுகொண்ட தமிழ்மொழிதான் மிகப் பழமையான மொழி. எனவே, தமிழ்மொழியை நாட்டின் ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும்" என்று கூறினார்.

## சிந்தனை வினா

**நீங்கள் ஒரு தலைவராக இருந்தால் எத்தகைய மக்கள் நலப்பணிகளைச் செய்வீர்கள்?**

**மக்கள் நலப் பணிகள் :**

மக்களுக்கு அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறையுள் ஆகியனவாகும். இவற்றில் முதலிரண்டு இடத்தில் உள்ளவை உணவும் உடையும். இவை வேளாண்மையை




Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores



**மாணவன் 2** : முதலில் பகவதி அம்மன் கோவிலுக்குச் சென்றோம். அக்கோவில் அழகிய வேலைப்பாடுகளுடன் அமைந்திருந்தது. அன்னையின் மூக்கில் உள்ள மூக்குத்தி இரத்தினக் கல்லால் ஆனது. அதன் ஒளியைப் பார்த்து அனைவரும் வியந்து போனோம்.

**மாணவன் 1** : அப்படியா? அதற்கடுத்து எங்கு சென்றீர்கள்?

**மாணவன் 2** : பிறகு கடற்கரையில் மெதுவாக நடந்து சென்று கடலலைகளின் ஆரவாரத்தைக் கண்டு மகிழ்ந்தோம். நானும் என் தங்கையும் கடல்நீரில் இறங்கி குளித்தோம். எங்களுக்கு மிகவும் பிடித்திருந்தது.

**மாணவன் 1** : எனக்குக் கூட கடற்கரைக்குச் செல்வது மிகவும் பிடிக்கும். ஆமாம் கன்னியாகுமரியில் முக்கடல் சேரும் என்று சொல்வார்களே?

**மாணவன் 2** : சரியாகச் சொன்னாய். வங்காள விரிகுடா, அரபிக்கடல், இந்தியப் பெருங்கடல் ஆகிய முக்கடல்களும் சங்கமிக்கின்றன. இந்த இடத்தினை குமரிமுனை என்பார்கள்.

**மாணவன் 1** : கேட்கவே மகிழ்ச்சியாக உள்ளது.

**மாணவன் 2** : அங்கு பதினாறு தூண்களைக் கொண்ட சிறப்புமிக்க நீராடுதுறை இருந்தது. அங்கு கருமணல், செம்மணல், வெண்மணல் முதலிய மூன்று நிற மணல்களுடம் வேற்றுமையின்றி விரவிக் கிடந்தன. நாங்கள் முழு நிலவு நாளில் சென்றிருந்ததால் சூரியனையும் சந்திரனையும் எதிரெதிர் திசையில் கண்டோம். இக்காட்சி வேறெங்கும் பார்க்க இயலாது.

**மாணவன் 1** : நான்கூட கேள்விப்பட்டிருக்கிறேன்.

**மாணவன் 2** : காந்தி நினைவாலயம் சென்றோம். அங்கு காந்தியடிகளின் பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம் நாளன்று சூரியனின் கதிர்கள் அவரது அஸ்திக்கலசம் வைக்கப்பட்ட மேடை மீது விழும் என்று கூறினார்கள்.

**மாணவன் 1** : வியப்பாக உள்ளதே!

**மாணவன் 2** : எனக்கும் வியப்பாகத்தான் உள்ளது. அதன்பிறகு கடற்கரையில் இருந்து சுமார் 400 மீட்டர் தொலைவில் உள்ள விவேகானந்தர் பாறைக்குப் படகில் சென்றோம். படகில் சென்ற அனுபவம் மிகவும் நன்றாக இருந்தது.

**மாணவன் 1** : நீ கூறியதைக் கேட்டதும் நானே கன்னியாகுமரிக்குச் சென்று வந்தது போல் உள்ளது.

**மாணவன் 2** : சரிடா. நான் உன்னைப் பார்க்க வந்ததே வீட்டுப்பாடங்கள் என்னென்ன உள்ளது என்பதைக் கேட்கத்தான் வந்தேன். சீக்கிரம் சொல், நான் வீட்டிற்குச் செல்ல வேண்டும்.

**மாணவன் 1** : இன்று வீட்டுப்பாடம் ஏதும் கொடுக்கவில்லை.

**மாணவன் 2** : நல்லதாப் போச்சு. எனக்கும் ஓய்வெடுக்க நேரம் கிடைத்தது. நான் சென்று வருகிறேன்.

மூன்றாம் பருவம்


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores



'செல்வத்துப் பயனே ஈதல்' என்பதை உணர வேண்டும். நாம் பெற்ற செல்வத்தைப் பிறருக்குக் கொடுப்பதால் குறைந்து விடுமே என எண்ணாமல் கொடுத்து உதவ வேண்டும். அவ்வாறு செய்யவில்லை எனில் துன்பப்படுவர் என்று புறநானூறு கூறுகிறது.

ஒரு சிலர் தானும் யாருக்கும் உதவி செய்ய மாட்டார்கள். உதவி செய்பவரையும் செய்யவிடாமல் தடுத்து விடுவார்கள். இவ்வாறு இருக்காமல் நாம் நம்மால் இயன்றவரை உதவி செய்து வாழ்வில் உயர்வோம்.

## சொல்லக் கேட்டு எழுதுக

1. மனித வாழ்க்கையில் தேவைப்படுவது பொறுமை.
2. குயில் குளிரில் நடுங்கியது; மழையில் ஒடுங்கியது; வெயிலில் காய்ந்தது.
3. இரக்கம் உடையோர் அருள்பெற்றவர் ஆவர்.
4. காயிதே மில்லத் என்னும் சொல்லுக்குச் "சமுதாய வழிகாட்டி" என்று பொருள்.
5. விடியும் போது குளிரத் தொடங்கிவிட்டது.

## கீழ்க்காணும் தலைப்புகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கவிதை எழுதுக

| அ) அன்பு | ஆ) தன்னம்பிக்கை |
|---|---|
| அன்பு ஒருநாள்<br>தோற்றுப் போகிறது,<br>அதன் மதிப்பு<br>தெரியாதவரிடம்<br>காட்டும் போது... | சுவரின் மூலையில் பின்னலான வலை<br>சிலந்தியின் தன்னம்பிக்கை கண்டு வியந்தேன்<br>கற்காலம் மாறியது நவீன யுகமாய்<br>மனிதனின் தன்னம்பிக்கை கண்டு வியந்தேன்<br>வியந்தால் போதுமா வெற்றி வேண்டாமா?<br>தோல்வி விதையில் தன்னம்பிக்கையெனும் உரமிட்டு<br>வெற்றிப் பயிரை அறுவடை செய்ய<br>நான் தயாராகிவிட்டேன். நீங்கள்? |

## சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக.

(எனவே, ஏனெனில், அதனால், ஆகையால், அதுபோல, இல்லையென்றால், மேலும்)

(எ.கா) காயிதே மில்லத் அவர்கள் மகிழுந்தில் பயணம் செய்வதை விரும்பாதவர்.
ஏனெனில் அவர் எளிமையை விரும்பியவர்.

1. நாம் இனிய சொற்களைப் பேச வேண்டும். .................... துன்பப்பட நேரிடும்.
[விடை: இல்லையென்றால்]
2. குயிலுக்குக் கூடு கட்டத் தெரியாது. ................. காக்கையின் கூட்டில் முட்டையிடும்.
[விடை: அதனால்/ஆகையால்]
3. அதிக அளவில் மரங்களை வளர்ப்போம். ................ மரங்கள்தான் மழைக்கு அடிப்படை.
[விடை: ஏனெனில்]




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores


## அலகுத் தேர்வு -3

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

1. சாந்த குணம் உடையவர்கள் ..................... முழுவதையும் பெறுவர்.
   அ) புத்தகம் ஆ) செல்வம் இ) உலகம் ஈ) துன்பம்
2. 'தானொரு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............
   அ) தா + ஒரு ஆ) தான் + னொரு
   இ) தான் + ஒரு ஈ) தானே + ஒரு
3. இந்த வேலையை முடிக்க ஒரு கை குறைகிறது என்பது ...................... .
   அ) முதலாகு பெயர் ஆ) சினையாகு பெயர்
   இ) தொழிலாகு பெயர் ஈ) பண்பாகு பெயர்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

4. மலைப்பொழிவு என்னும் பகுதி ........... என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.
5. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே ............. ஆம் ஆண்டு போர் மூண்டது.
6. இந்தியா வென்றது ............................

**III. பொருந்துக.** (4 × ½ = 2)

7. சாந்தம் - சிறப்பு
8. மகத்துவம் - உலகம்
9. தாரணி - கருணை
10. இரக்கம் - அமைதி

**IV. சரியான இணைப்புச் சொல்லால் நிரப்புக.** (2 × ½ = 1)

11. நாம் இனிய சொற்களைப் பேச வேண்டும். .................... துன்பப்பட நேரிடும்
12. குயிலுக்குக் கூடு கட்டத் தெரியாது. ................. காக்கையின் கூட்டில் முட்டையிடும்.

**V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** (3 × 2 = 6)

13. வாழ்க்கை மலர்ச்சோலையாக மாற என்ன செய்ய வேண்டும்?
14. குயில் குஞ்சு தன்னை எப்போது 'குயில்' என உணர்ந்தது?
15. விடுதலைப் போராட்டத்தில் காயிதே மில்லத் அவர்களின் பங்கு பற்றி எழுதுக.
16. இரட்டைக் கிளவி என்பது யாது? சான்று தருக.

**VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும்.** (2 × 3 = 6)

17. எல்லா மக்களும் ஒற்றுமையாக வாழ என்ன செய்ய வேண்டும்?
18. நீங்கள் ஒரு தலைவராக இருந்தால் எத்தகைய மக்கள் நலப்பணிகளைச் செய்வீர்கள்?
19. தீ விபத்து ஏற்பட்டால் உடனடியாகச் செய்ய வேண்டிய செயல்கள் யாவை?

**VI. அடிமாறாமல் எழுதுக.** 4

20. 'வாயும் வயிறும்' எனத் தொடங்கும் 'மலைப்பொழிவு' பாடலை நான்கு வரிகள் எழுதுக.

☆ ☆ ☆




Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
This is only for Sample Materials
for full Book Order Online or Available at all Leading Bookstores



## விடைகள்

1. ஆ) மாரி
2. இ) இனிமை + சொல்
3. அ) மருந்து
4. அ) இவையில்லாது
5. நீட்டல்
6. முகமது இசுமயில்
7. அமைதி
8. சிறப்பு
9. உலகம்
10. கருணை
11. பார்க்க இயல் 1 – செய்யள் – புத்தக வினா கேள்வி எண் – 1
12. பார்க்க இயல் 2 – செய்யுள் – புத்தக வினா கேள்வி எண் – 2
13. பார்க்க இயல் 2 – திருக்குறள் – புத்தக வினா கேள்வி எண் – 1
14. பார்க்க இயல் 1 – உரைநடை – புத்தக வினா கேள்வி எண் – 1
15. பார்க்க இயல் 2 – உரைநடை– புத்தக வினா கேள்வி எண் – 2
16. பார்க்க இயல் 3 – உரைநடை– புத்தக வினா கேள்வி எண் – 1
17. பார்க்க இயல் 3 – கற்கண்டு– புத்தக வினா கேள்வி எண் – 1
18. பார்க்க இயல் 1 – வயலும் வாழ்வும்– புத்தக சிறுவினா கேள்வி எண் – 1
19. பார்க்க இயல் 2 – புதுமை விளக்கு– புத்தக சிறுவினா கேள்வி எண் – 1
19. பார்க்க இயல் 3 – மலைப்பொழிவு புத்தக சிறுவினா கேள்வி எண் – 1
21. பார்க்க இயல் 1 – உரைநடை புத்தக சிறுவினா கேள்வி எண் – 2
22. பார்க்க இயல் 3 – உரைநடை புத்தக சிறுவினா கேள்வி எண் – 1
23. பார்க்க மனப்பாடப்பகுதியை பார்க்கவும்
24. பார்க்க மனப்பாடப்பகுதியை பார்க்கவும்
25. நகமும் சதையும் போல
26. எங்கு
27. பிடிக்கின்றனர்
28. செங்கல், பட்டு, படு, செல், பல், கல், பகல், பகட்டு
29. திருமால்
30. முதுமை
31. சிந்தித்துச் செயலாற்றினால் நாம் சிறப்படையலாம்.
32. தமுக்கம் மைதானத்தில் புத்தகக் கண்காட்சி தொடங்கியதால் மக்கள் ஆர்வத்துடன் வருகை தந்தனர்.
33. கடலில் பயணம் செய்ய கட்டுமரம் உதவும்
34. தடதட
35. பார்க்க இயல் 1 – மொழியை ஆள்வோம் பகுதியை பார்க்கவும்.
36. பார்க்க இயல் 3 – 'மலைப்பொழிவு' கற்பவை கற்றபின் பகுதியை பார்க்கவும்.
37. பார்க்க இயல் 2 – கட்டுரை பகுதியை பார்க்கவும்.

(அல்லது)

பார்க்க இயல் 3 – கடிதம் பகுதியை பார்க்கவும்.

☆ ☆ ☆




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000 / 8124301000
Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com